# அரிமா நோக்கு

# ARIMAA NOKKU


ISSN: 2320-4842 (Print)
ISSN: 3049-2688 (Online)

ICSSR

ICSSR New Delhi has awarded a grant to the "Arima Nokku" for the year 2025-2026.

Volume -20

Issue - 3

Jul-Sep 2026




மொழி • இலக்கியம் • கலை • பண்பாடு • வரலாறு • மெய்யியல் • அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

INTERNATIONAL QUARTERLY ON LANGUAGE, LITERATURE, ART, CULTURE, HISTORY, PHILOSOPHY AND SCIENCE

International Research Journal Since 2007

Peer Reviewed • Refereed • International Journal

International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

அரிமா நோக்கு
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

ISSN: 3049-2688 (Online)

அரிமா நோக்கு
20 : 3 ஜூலை - செப்டம்பர் 2026

*ஆசிரியர்*
தமிழ்ச் செம்மல்
பேராசிரியர் முனைவர்
இரா. பன்னிருகைவடிவேலன்

*ஆசிரியர் குழு*
நா. கணேசன் (அமெரிக்கா)
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
ஒப்பிலா மதிவாணன்
சீதாலட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
அப்பாசாமி முருகையன் (பிரான்ஸ்)
வெ. முருகன்
மனோன்மணி தேவி (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
மருதூர் அரங்கராசன்
பெ. இலக்குமிநாராயணன்
கோ. பழனி
மு. வையாபுரி
சி. சிதம்பரம்
பா. விஜயகுமார்
ஹெப்சி ரோஸ் மேரி
ச. திருநாவுக்கரசு
ப. குமார்
கி. துர்காதேவி
உ. கருப்பத்தேவன்

*ஓவியர்*
சுபா. முனிவேல்
அ. கார்த்திக் தங்கராஜன்

*அறிவுரைக் குழு*
இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

*பதிப்பாசிரியர்*
இரா. பன்னிருகைவடிவேலன்
+91 91766 30415

# பொருளடக்கம் CONTENTS

சு. வேணுகோபாலின் "வீழ்ந்த மரத்தில் வாழ்ந்த பறவைகள்" சிறுகதையில் மனித உறவுகள்
*அழகுசுந்தரி. ஆ - பொ. சுதாராணி* 05-07

சவ்வாதுமலை மலையாளி பழங்குடிகளின் தொழில்கள்
*இரா. மகாலெட்சுமி - சு. இராசவேலு* 08-14

வீரயுகநாயகன் வேள்பாரி நாவல் வழியே வெளிப்படும் ஆளுமைத்திறம்
*கா. ஆகாஷ் - து. வேணி* 15-20

(ஆக) சொல் புதிது பொருள் புதிது
*கோ. பழனிராஜன்* 21-25

எடுத்துரைப்பியல் நோக்கில் வாயில் கூற்றுகள்
*சந்தியா - ஆ. அருணாச்சலம்* 26-29

வள்ளலார் பேசும் இறைநெறி கொள்கை
*சு. நந்தினி - சி. ஆறுமுகம்* 30-34

ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆண்டாள் - ஸ்ரீ ரெங்கமன்னர் திருக்கோவில் வழிபாடு மற்றும் முக்கிய திருவிழாக்கள்-*செ. நாகலெட்சுமி-ச.பிரியா* 35-40

பேரா. இரா. சாரங்கபாணியார் திருக்குறள் உரைவேற்றுமையில் பாட வேறுபாடுகள்
*தி. வனரோஜா - த. சசிகலா* 41-44

வள்ளுவர் வலியுறுத்தும் ஊழ் : குறளாழி ஆ. இரத்தினத்தின் திறனாய்வுப் பார்வை
*து. சத்தியவாணி - மு. சுதா* 45-53

மணிமேகலை காப்பியத்தில் மறு சமய மறுப்புக கருத்துகள்
*நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு - ச. செந்தில்குமார்* 54-61

இமயம் நாவல்கள் காட்டும் பெண்கள் நிலை
*பா. பன்னீர்செல்வம் - ப. சங்கீதா* 62-66

எட்டுத்தொகையில் தமிழர்களின் வேளாண் அறிவு
*பி. பிரதியுஷா - கரு. முருகன்* 67-69

ஆசாரக்கோவையும் உணவும்
*ம. இராம்குமார் - எஸ். உமாமகேஸ்வரி* 70-72

பாரதிதாசன் பாடல்களில் தேசிய, இனத்துவ அடையாள உருவாக்கமும் சமூக மறுமலர்ச்சிக் கோட்பாடுகளும்
*இரா. தீபன் சரண்ராஜ் - ப. தேவராஜ்* 73-79

சங்க இலக்கியத்தில் உணவியல் - *இரா. மதன்ராஜ்* 80-87

சங்க இலக்கியத்தில் அறம் ஒரு கட்டவிழ்ப்பு முயற்சி
*மா. சந்துரு - சு. இரவிச்சந்திரன்* 88-91

சுந்தரவல்லி சொல்லாத கதை கூறும் வண்டல் நில மக்களின் உணவுப் பண்பாடு
*மு. மீனாட்சி - முனைவர் இரா. காமராசு* 92-96

International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

அரிமா நோக்கு
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

ISSN: 3049-2688 (Online)

அரிமா நோக்கு
20 : 3 ஜூலை - செப்டம்பர் 2026

**ஆசிரியர்**
தமிழ்ச் செம்மல்
பேராசிரியர் முனைவர்
இரா. பன்னிருகைவடிவேலன்

**ஆசிரியர் குழு**
நா. கணேசன் (அமெரிக்கா)
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
ஒப்பிலா மதிவாணன்
சீதாலட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
அப்பாசாமி முருகையன் (பிரான்ஸ்)
வெ. முருகன்
மனோன்மணி தேவி (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
மருதூர் அரங்கராசன்
பெ. இலக்குமிநாராயணன்
கோ. பழனி
மு. வையாபுரி
சி. சிதம்பரம்
பா. விஜயகுமார்
ஹெப்சி ரோஸ் மேரி
ச. திருநாவுக்கரசு
ப. குமார்
கி. துர்காதேவி
உ. கருப்பத்தேவன்

**ஓவியர்**
சுபா. முனிவேல்
அ. கார்த்திக் தங்கராஜன்

**அறிவுரைக் குழு**
இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

**பதிப்பாசிரியர்**
இரா. பன்னிருகைவடிவேலன்
+91 91766 30415

# பொருளடக்கம் CONTENTS

பாரம்பரிய நிகழ்த்துக் கலைகளின் மரபும் வரலாறும்
முனைவர் த. ஆனந்தன் 97-101

நரி விருத்தத்தில் அறக்கருத்துகள்
இரா. காந்திமதி 102-104

தொல்காப்பிய மொழியியல் சிந்தனைகள்: 'சொல்லுக்கு முந்தும் பொருள்' ஓர் ஆய்வு
யோகவதி தளையசிங்கம் - பா. சந்திரமோகன் 105-113

போளூர் வட்டச் சைவப் பழங்கோயில்களின் வழிபாடுகள்
ரா. சக்திவேல் - க. தமிழ்ச்செல்வன் 114-121

கவிஞர் ஆண்டன் பெனியின்,' 'நிறமி' கவிதைத் தொகுப்பு: ஒரு பெண்ணியத் திறனாய்வு
ஏ. கந்தவேலு - பா. முத்துச்சாமி 122-125

நெல்லை ஜெயந்தாவின் திணை மயக்கம் கவிதைகளில் சமூகப்பார்வை - வை.பிந்து - தி.குமார் 126-130

வழிபாட்டு வளர்ச்சியில் ஆற்றுப்படை
வெ. விஷ்ணு - இரா. சிவகுமார் 131-136

தருமபுரி மாவட்ட இருளர் பழங்குடிகளின் உணவு முறைகள்
மா. கலைவாணன் - கி. சுமித்ரா 137-142

சங்க மகளிர் பாடல்களில் வாழ்வியல்
இரா. ஜானகி 143-148

ஆருரர் தேவாரம் உணர்த்தும் நிலையாமை
து. சுபஸ்ரீ - இரா. மணிமேகலை 149-154

கண்மணி குணசேகரன் சிறுகதைகளில் கதைமாந்தர்களும் கதைக்கருவும்
தே. பிரியங்கா - தெ. மேகநாதன் 155-160

Diasporic Consciousness in the Select Novels of Bharati Mukherjee
I. Mathavi - M. Muruganantham 161-164

Inner Turmoil, Outer Worlds: Psychological Realism in Aravind Adiga's Novels
A. Remana - B. Siva Priya 165-169

The Concept of Reinventing Oneself in Manju Kapur's The Immigrant
A. Catherin - S. Sobana 170-174

School Environment Scale :Tool Development and Validation
L. Arul Suganthi Agnes - M. Muthupandi 175-185

Dynamic Hill Adaptation: A Cultural Ecological reading of Easterine Kire's Sky is My Father
J. V. Ashlin Bibina - S. Zahira Banu 186-190

**International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal**
**ISSN: 2320-4842 (Print)** **ISSN: 3049-2688 (Online)**

அரிமா நோக்கு
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

**ISSN: 3049-2688 (Online)**

அரிமா நோக்கு
20 : 3 ஜூலை - செப்டம்பர் 2026

*ஆசிரியர்*
தமிழ்ச் செம்மல்
பேராசிரியர் முனைவர்
இரா. பன்னிருகைவடிவேலன்

*ஆசிரியர் குழு*
நா. கணேசன் (அமெரிக்கா)
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
ஒப்பிலா மதிவாணன்
சீதாலட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
அப்பாசாமி முருகையன் (பிரான்ஸ்)
வெ. முருகன்
மனோன்மணி தேவி (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
மருதூர் அரங்கராசன்
பெ. இலக்குமிநாராயணன்
கோ. பழனி
மு. வையாபுரி
சி. சிதம்பரம்
பா. விஜயகுமார்
ஹெப்சி ரோஸ் மேரி
ச. திருநாவுக்கரசு
ப. குமார்
கி. துர்காதேவி
உ. கருப்பத்தேவன்

ஓவியர்
சுபா. முனிவேல்
அ. கார்த்திக் தங்கராஜன்

*அறிவுரைக் குழு*
இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

*பதிப்பாசிரியர்*
இரா. பன்னிருகைவடிவேலன்
+91 91766 30415

# பொருளடக்கம் CONTENTS

Socio-Cultural Realities in the Selected Short Stories of Bama - A. Padma Priya *191-194*

Role of Muslim Organizations in Educational Development: Evidence from Vaniyambadi
J. Amjath Babu - C. Mohamed Faheem *195-197*

From Being to Becoming: A Feminist Reading of Manju Kapur's Home
M. Madhumitha - M. Muruganantham *198-201*

The Sound of Silence in Shashi Deshpande's that Long Silence
N. Gayathri - M. Muruganantham *202-205*

Women Educational Attainment and Health-Seeking Behaviour – A Critical Analysis of Cuddalore District
P. Indira - N. Malathi *206-210*

The Collapse of the House of Ghosh: Family, Politics, and Decay in Neel Mukherjee's The Lives of Others
R. Gayathri - K. Ravichandran *211-213*

Depiction of Sisterhood in Chitra Banerjee Divakaruni's Sister of My Heart
S. Vigneshwari - M. Muruganantham *214-217*

Ecofeminism as a Literary Theory:A Critical Overview
T. Elakkiya - K. Ravichandran *218-221*

Evaluating the Stand-Up India Scheme through an SDG Lens: Policy Evolution, Performance Outcomes, and Women's Financial Inclusion in India
D. Padma - R. Gayathri *222-233*

Reconstructing Ancient Tamil Civilization through Archaeological Evidence: Insights from the Keezhadi Excavations - T. Balasubramanian
N. Dhanalakshmi - V. Venkatraman *234-242*

*கம்பராமாயணத்தில் கம்பர் கூறும் அரசியல் நெறிகள்*
*இரா. சங்கீதா - சா. பூங்கொடி* *243-246*

*புறநானூற்றில் மகளிரின் வீரம்*
*க. கவிதா - ப. சி. சரவணன்* *247-250*

*புறச்சந்திக்கான கணினிவழி பகுப்பாய்வு மற்றும் செயலாக்கம் - இரா. சண்முகம்* *251-255*

*சஞ்சாரம் நாவலில் நாதஸ்வரக் கலை: பண்பாடும் கலைஞர்களின் வாழ்வியலும்*
*நா. திஷா - க. கோமதி* *256-259*

*பெரியபுராணத்தில் மகளிரின் பக்தி வாழ்வியல்*
*வெ. ஜெயலட்சுமி - சா. பூங்கொடி* *260-264*

International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

# தோரணவாயில்

இரா. பன்னிருகைவடிவேலன்

அரிமா நோக்கு
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

## செயற்கை நுண்ணறிவும் தமிழ்க் கல்வியும்: காலத்தின் புதிய அழைப்பு

அச்சுக்கலை அறிவைப் பொதுமக்களிடம் கொண்டு சென்றது. இணையம் உலக அறிவை நம் விரல் நுனியில் வைத்தது. இன்று செயற்கை நுண்ணறிவு (AI) கல்வி, ஆய்வு, அறிவுப் பரிமாற்றம் ஆகியவற்றின் இயல்பையே மாற்றியமைத்து வருகிறது. இந்த மாற்றம் ஒரு தொழில்நுட்பப் புரட்சி மட்டுமல்ல; மனிதன் அறிவை உருவாக்கும் மற்றும் பயன்படுத்தும் முறையில் நிகழும் அடிப்படை மாற்றமாகும். இந்நிலையில் தமிழ்க் கல்வி தன்னை எவ்வாறு நிலைநிறுத்தப் போகிறது என்பதே நம் முன் நிற்கும் முக்கியமான கேள்வியாகும்.

செயற்கை நுண்ணறிவு தமிழுக்கு அச்சுறுத்தல் அல்ல. மாறாக, அதைப் புரிந்துகொள்ளத் தயங்கும் மனப்போக்கே உண்மையான சவாலாகும். உலகின் முன்னணி கல்வி நிறுவனங்கள் AI-ஐ கற்றல், கற்பித்தல், ஆய்வு, மதிப்பீடு ஆகிய அனைத்திலும் ஒருங்கிணைத்து வருகின்றன. தேசிய கல்விக் கொள்கை – 2020 கூட தொழில்நுட்ப ஒருங்கிணைப்பையும் பல்துறை அணுகுமுறையையும் உயர்கல்வியின் மையக் குறிக்கோள்களாக வலியுறுத்துகிறது. இந்நிலையில் தமிழ்க்கல்வி மாற்றத்தைப் பின்தொடராமல், மாற்றத்தை வழிநடத்தும் நிலைக்கு உயர வேண்டும்.

இன்று ChatGPT, Gemini, Claude, Copilot போன்ற உரையாடல் AI கருவிகளும், Perplexity, ResearchRabbit, NotebookLM போன்ற ஆய்வுக் கருவிகளும் அறிவுத்தேடலை வேகப்படுத்துகின்றன. பாடத்திட்டம் தயாரித்தல், ஆய்வுக்கட்டுரைகளை மேம்படுத்துதல், மொழிபெயர்ப்பு, விளக்கக்காட்சி உருவாக்கம், தரவு பகுப்பாய்வு போன்ற பணிகள் எளிமையடைந்துள்ளன. இவை ஆசிரியரின் பங்கைக் குறைப்பதற்காக அல்ல; அவரது அறிவாற்றலையும் படைப்பாற்றலையும் விரிவுபடுத்துவதற்காகவே.

தமிழுக்கும் இத்துறையில் புதிய வாய்ப்புகள் உருவாகியுள்ளன. ஓலைச்சுவடிகள் மின்னூல்களாக மாற்றப்படுகின்றன. மொழித்தரவுகள், குரல் வளங்கள், மின்னணு அகராதிகள், திறந்த களஞ்சியங்கள் ஆகியவை விரிவடைகின்றன. மொழியியல், தரவியல், செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றின் இணைப்பில் புதிய ஆய்வுத்துறைகளும் வேலைவாய்ப்புகளும் உருவாகின்றன. “தமிழைப் படித்தால் வேலைவாய்ப்பு குறைவு” என்ற பழைய கருத்தை மாற்றும் ஆற்றல் இந்த மாற்றத்தில் உள்ளது. அதேவேளையில், செயற்கை நுண்ணறிவு மனித அறிவிற்கு மாற்றாக அமைய முடியாது. விமர்சனச்சிந்தனை, ஆய்வுமுறை, பண்பாட்டு புரிதல், கல்வி நேர்மை ஆகியவை மனிதனின் பொறுப்புகளாகவே தொடர்கின்றன. எனவே AI-ஐ அறிவின் மாற்றாக அல்ல; அறிவை விரிவுபடுத்தும் துணைக்கருவியாகப் பயன்படுத்தும் கல்விப்பண்பாட்டை உருவாக்குவது அவசியமாகிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான இலக்கிய மரபைக் கொண்ட தமிழின் எதிர்கால வலிமை அதன் தொன்மையில் மட்டும் இல்லை; புதிய தொழில்நுட்பங்களைத் தழுவும் திறனிலும் உள்ளது. தமிழுக்கான திறந்த மொழித்தரவுகள் உருவாக்கப்பட வேண்டும். பல்கலைக்கழகங்களில் “தமிழும் செயற்கை நுண்ணறிவும்” என்ற புதிய பாடத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். ஆசிரியர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் ஆகியோருக்குத் தொடர்ச்சியான AI பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். தமிழின் டிஜிட்டல் எதிர்காலத்தை உருவாக்குவது இனி ஒரு தேர்வு அல்ல; காலத்தின் கட்டாயமாகும்.

**செயற்கை நுண்ணறிவு தமிழுக்கு எதிரி அல்ல; அதை அறிய மறுக்கும் மனப்போக்கே தமிழின் எதிர்காலத்திற்கு உண்மையான சவாலாகும். தொழில்நுட்பத்தை அச்சத்துடன் அல்ல, அறிவுடன் வழிநடத்தும் சமூகமாக நாம் மாறினால், உலக அறிவு அரங்கில் தமிழின் இடம் மேலும் உயர்வது உறுதி.**

*International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal*
*ISSN: 2320-4842 (Print)* *ISSN: 3049-2688 (Online)*

# தமிழறிவின் ஒளிக்கோபுரம் – முதுபெரும் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி

**என் ஆசிரியர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி – நினைவஞ்சலி**

தமிழுலகம் தன் தலைசிறந்த அறிஞர்களில் ஒருவரை இழந்துள்ளது. தமிழ்ப்பேரறிஞர், முதுபெரும்பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி (05.02.1942 – 13.05.2026) அவர்கள் மறைந்த செய்தி தமிழ் ஆய்வுலகிற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். தமிழ்மொழி, இலக்கியம், இலக்கணம், சுவடியியல், பதிப்பியல், நடையியல் ஆய்வு உள்ளிட்ட பல துறைகளில் அரிய பங்களிப்புகளைச் செய்தவர்; ஆய்வாளர்களை உருவாக்கிய கல்வியாளர்.

என் வாழ்வின் கல்விப்பயணத்தை வடிவமைத்த திருக்குறள் ஆசான் இ.சுந்தரமூர்த்தி ஆவார். எப்படி எனில் 1999ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித்துறையில் முதுகலை மாணவராகச் சேர்ந்தபோது அவரை ஆசிரியராகப் பெற்றேன்; தொடர்ந்து ஆய்வியல் நிறைஞர் மற்றும் முனைவர்பட்ட ஆய்வு வரை நீண்ட என் கல்விப்பயணத்தில் அவர் அறிவு வழிகாட்டியாகவும் ஊக்கமூட்டும் ஆசிரியராகவும் இருந்தார். வகுப்பறையில் அவர் கற்பித்த பாடங்கள் என்னை ஆய்வின் உலகிற்குள் அழைத்துச் சென்ற ஆய்வுப்பயணங்களாக இருந்தது. ஒரு நூலை எவ்வாறு வாசிக்க வேண்டும்; எவ்வாறு ஆய்வு செய்ய வேண்டும்; ஆய்வில் நேர்மையும் நெறிப்பாடும் பற்றி அவரின் கற்பித்தல்வழி அறிந்து கொண்டேன். சென்னைப் பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் உள்ளிட்ட பல்வேறு கல்வி நிறுவனங்களில் உயர்பதவியில் இருந்த பேராசிரியர், மாணவர்களிடம் அவர் காட்டிய எளிமையும் அன்பும் எப்போதும் மாறவில்லை. ஆய்வாளர்களின் வளர்ச்சியில் அவர் காட்டிய அக்கறை, அவரை ஒரு சிறந்த அறிஞராகவும், மனிதநேயம் மிக்க பேராசிரியராகவும் உயர்த்தியது.



பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி அவர்களுடன் அனைத்துலகத் தமிழ்க்கல்வி பண்பாடு அறிவியல் மேம்பாட்டு இணையத்தின் உறுப்பினர்கள்

அனைத்துலகத் தமிழ்க்கல்வி பண்பாடு அறிவியல் மேம்பாட்டு இணையம் (ITEC) தமிழ்த்திரு சிவசோதி வரதராசா அவர்களின் பெரும் முயற்சியால் ஜெர்மனி பீலபீல்ட் நகரில் உருவாக்கப் பெற்றது. இந்த தமிழ்ப் பாடநூல் உருவாக்கத் திட்டத்தில் என்னையும் இணைத்துக் கொண்டார், எனவே 2024ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19 முதல் செப்டம்பர் 12 வரை ஜெர்மனியில் நடைபெற்ற ITEC தமிழ்ப்பாடநூல் உருவாக்கத் திட்டத்தில் அவருடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பை பேராசிரியர் இ.சு அவர்களால் எனக்குக் கிடைத்தது. ஒருகாலத்தில் அவரது வகுப்பறையில் அமர்ந்து கற்ற மாணவனாக இருந்த நான், பின்னர் அவருடன் இணைந்து தமிழ்ப்பணியில் ஈடுபட்டது என் வாழ்வின் பெரும் பேறாகும். அந்த நாட்களில் அவரின் நினைவாற்றல், மொழியறிவு, பாடநூல் உருவாக்கம் குறித்த சிந்தனைகளையும் ஆழ்ந்த புலமையையும் அறிந்துகொண்டேன். இன்று அவர் நம்மிடையே இல்லாவிட்டாலும், அவர் எழுதிய ஆய்வு நூல்கள், ஆய்வு மேற்பார்வையாளராக நெறிப்படுத்திய ஆய்வு மாணவர்கள் அவரின் தமிழறிவை வியந்து கொண்டே இருப்பார்கள்.

தமிழறிவின் ஆலமரமாக விளங்கிய என் ஆசிரியர் பேராசிரியர் இ.சுந்தரமூர்த்தி, திருக்குறள் அறிஞர் அவர்களுக்கு என் பணிவான கண்ணீரஞ்சலியைச் செலுத்துகிறேன்.

**- முனைவர் இரா. பன்னிருகைவடிவேலன் ஆசிரியர் - பதிப்பாசிரியர், அரிமா நோக்கு**

# பேராசிரியர் முனைவர் இ. சு. ஐயா அவர்கள் தமிழ் உள்ளளவும் வாழ்வார்... தமிழாய் வாழ்வார்...



கலித்தொகையின் **'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்'** என்னும் காலத்தால் அழியாத இலக்கிய அடிகளுக்குக் கண்ணெதிர் எடுத்துக்காட்டாக நம்மிடையே வாழ்ந்த மாமனிதர்தான் பேராசிரியர் முனைவர் இ. சுந்தரமூர்த்தி ஐயா அவர்கள்.

சான்றோர்கள் போற்றும் சான்றோராய் – ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோராய் – அறிஞர்கள் போற்றும் அறிஞராய் – குறள்நெறிப்படி வாழ்ந்த மாமனிதராய் – மாந்தநேயராய் நம்முன் வலம்வந்த பேராசிரியர் இ.சு.ஐயா அவர்கள் இன்று நம்மிடையே இல்லை என்பதுதான் உண்மை... என்றாலும்கூட, அதை நம்பவோ ஏற்கவோ இந்தப் பேதை மனம் மறுக்கிறது; அந்தச் செய்தி பொய்யாக இருந்து விடக்கூடாதா என்று மனம் ஏங்கித் தவிக்கிறது.

பேராசிரியருக்கும் எனக்குமான தொடர்பு – உறவு என்பது கால் நூற்றாண்டுக்கும் மேலானது. அதை 'இறைவன் – அன்பன்' உறவு என்பதா? 'ஆசான் – மாணாக்கன்' உறவு என்பதா? 'தந்தை – மகன்' உறவு என்பதா? 'அண்ணன் – தம்பி' உறவு என்பதா? 'உற்றுழி உதவும் ஆருயிர் நண்பனுடனான' உறவு என்பதா? இவற்றையெல்லாம் கடந்த ஒன்று என்பதா?

என் தந்தையை இழந்தபோது நான் அடைந்த அதே துன்பத்தை – துயரத்தை – கவலையை – வெறுமையை – ஆதரவற்ற நிலையில் கைவிடப்பட்ட கையறு நிலையை நான் இப்போது உறுகிறேன்; ஆற்றுவாரின்றித் தவிக்கிறேன்; ஆதரவின்றித் துடிக்கிறேன்; செய்வதறியாது திகைக்கிறேன்; திசை தெரியாது தத்தளிக்கிறேன்.

ஈழநாட்டிலிருந்து மண்ணை விட்டு, வீட்டை விட்டு, சொந்தங்களை விட்டு, நிலபுலன்களை விட்டு, மக்களை விட்டு, வேரை விட்டு, விழுதை விட்டு – வேறுவழியின்றி, புலம்பெயர்ந்து உலகெங்கும் வாழும் நூறாயிரக்கணக்கான தமிழர்களின் அடுத்தடுத்த தலைமுறையினர்க்குத் தமிழ்மொழியையும், தமிழர் பண்பாட்டையும், தமிழ் மொழி – இன உணர்வையும், தமிழர் வரலாற்றையும், கலையையும் கொண்டுசெல்ல வேண்டும் என்னும் உயரிய நோக்கில் 2000ஆம் ஆண்டில் – ஜெர்மனியைத் தலைமை இடமாகக் கொண்டு – முழுக்கமுழுக்கச் சேவை உணர்வுடன் தொடங்கப்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனந்தான் 'அனைத்துலகத் தமிழ்க்கல்வி, பண்பாடு, அறிவியல் மேம்பாட்டு இணையம்' (International Tamil Educational Cultural Scientific Development Federation / ITEC)

2000ஆவது ஆண்டில் ஜெர்மனியில் இந்த அமைப்பை நாங்கள் தொடங்கும்போது எங்களுடன் ஒருவராய் – எங்களின் உணர்வோடு ஒன்றி உடனிருந்தவர்தான் எங்கள் ஐயா பேராசிரியர் இ.சு. அவர்கள்.

பேராசிரியர் ச.அகத்தியலிங்கனார், செ. வை. சண்முகனார், இராமர் இளங்கோ, ஓவியர் டிராட்ஸ்கி மருது, இலங்கைப் பேராசிரியர் கா. சிவத்தம்பி, சிங்கப்பூர்ப் பேராசிரியர் சுப. திண்ணப்பன் போன்றோருடன் பேராசிரியர் இ. சு. ஐயா அவர்களும் 2000ஆவது ஆண்டில் ஜெர்மனி வந்து ஒரு மாதகாலம் தங்கியிருந்து, உலகெங்கும் உள்ள தமிழ் மாணவர்களுக்குரிய தமிழ்ப்பாடத் திட்டத்தையும், பாடநூல்களையும், ஆசிரியர் கையேடு, – மாணவர் கையேடு, பெற்றோர் கையேடு ஆகியவற்றையும் தயாரித்து உதவினார்கள்.

மீண்டும் 2017இல் காலத்துக்கு ஏற்பவும், அறிவியல் – தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்பவும் பாடத்திட்டத்தை மாற்றியமைக்க முற்பட்டபோது, அமைக்கப்பட்ட பாடத்திட்டக்குழுவுக்கும் தலைவராக இருக்க ஒப்புக்கொண்டு, அந்தப் பணியைச் செவ்வனே செய்துவந்தார்கள். 2017, 2019, 2024 ஆகிய ஆண்டுகளில் பேராசிரியர் மருதுராரோடு ஜெர்மனிக்கு நேரில் வந்து, தங்கியிருந்து, பாடநூல் உருவாக்கப்பணியை நேர்த்தியாகச் செய்து தந்தார்கள்; தொடர்ந்து அப்பணியில் ஈடுபட்டும் வந்தார்கள்.

அந்தப் பெருந்தகை இன்று இல்லை என்பதை நினைக்கும்போதே நெஞ்சம் வெடித்துவிடும்போல் உள்ளது.

அவர் எங்கள் குடும்பத்தினர் உள்ளங்களில் எல்லாம் – அவர் தயாரித்து அளித்துள்ள பாடநூல்களை உலகெங்கும் இருந்து படித்து வருகிற பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் உள்ளங்களில் எல்லாம் – அந்த மாணவர்களின் பெற்றோர்கள்தம் உள்ளங்களில் எல்லாம் – பாடங்களைப் பயிற்றுகிற நூற்றுக்கணக்கான ஆசிரியர்களின் உள்ளங்களில் எல்லாம் – உலகெங்கும் இருக்கிற தமிழர்களின் உள்ளங்களில் எல்லாம் காலம் கடந்து நீடு நிலைத்திருப்பார்; தமிழ் உள்ளளவும் அவர் புகழ் நீடு நிலைத்திருக்கும். அவர் தமிழ் உள்ளளவும் நம்மிடையே தமிழாய் வாழ்வார்.

பேராசிரியரின் ஆன்மா இறைவனின் திருவடிகளில் இளைப்பாறட்டும்.

**இவண்**
***சிவசோதி வரதராஜா***
**Chairman, ITEC, Bielefeld, GERMANY. 17 - 06 - 2026**